கோடம்பாக்கம் மண்டலம்

நெசப்பாக்கத்தில் ரூ 86.94 கோடி மதிப்பீட்டில் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம்!

அமைச்சர் கே.என்.நேரு ஆய்வு!

சென்னை, செப்.2- நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் கே.என். நேரு கோடம்பாக்கம் மண்டலம், நெசப்பாக்கத்தில் ரூ.86.94 கோடி மதிப்பீட்டில் புதிதாக அமைக்கப்பட்டு செயல்பட்டுவரும் இரண்டாம் நிலை கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தின் செயல்பாடுகள் மற்றும் ரூ.31.53 கோடி மதிப்பீட்டில் கே.கே.நகர் அண்ணா பிரதான சாலையில் மேற்கொள்ளப்பட்டுவரும் கழிவுநீர் கட்டமைப்பினை மாற்றி அமைக்கும் பணிகளையும் ஆய்வு செய்தார்.

நேற்று (01.09.2023) நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு அவர்கள் கோடம்பாக்கம் மண்டலம், நெசப்பாக்கத்தில் ரூ.86.94 கோடி மதிப்பீட்டில் புதிதாக அமைக்கப்பட்டு செயல்பட்டுவரும் நாளொன்றுக்கு 50 மில்லியன் லிட்டர் திறன் கொண்ட இரண்டாம் நிலை கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் மற்றும் ரூ.31.53 கோடி மதிப்பீட்டில் கலைஞர் கருணாநிதி நகர் அண்ணா பிரதான சாலையில் மேற்கொள்ளப்பட்டுவரும் கழிவுநீர் கட்டமைப்பினை மாற்றி அமைக்கும் பணிகளையும் ஆய்வு செய்தார்.

கலைஞர் கருணாநிதி நகர் அண்ணா பிரதான சாலையில் கழிவுநீர் கட்டமைப்பினை மாற்றி அமைக்கும் பணிகள்

பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதி10, கோடம்பாக்கம் மண்டலத்திற்குட்பட்ட சி.ஐ.டி நகர், அசோக் நகர், கே.கே.நகர், எம்.ஜி.ஆர் நகர், நெசப்பாக்கம், ஜாபர் கான்பேட்டை, சைதாப்பேட்டை, சாலிகிராமம் மற்றும் விருகம்பாக்கம் ஆகிய பகுதிகளிலிருந்து நாளொன்றுக்கு 80 மில்லியன் லிட்டர் கழிவுநீர் (மழைக்காலங்களில் நாளொன்றுக்கு 118 மில்லியன் லிட்டர் வரை) 22 கழிவுநீர் உந்து நிலையங்கள் மூலம் சேகரிக்கப்பட்டு அண்ணா பிரதான சாலையில் உள்ள 5 மீட்டர் முதல் 9 மீட்டர் ஆழம் வரை பதிக்கப்பட்டுள்ள கான்கிரீட் குழாய்கள் மூலமாக நெசப்பாக்கம் கழிவுநீர் உந்து நிலையத்திற்கு தற்போது அனுப்பப்பட்டு வருகிறது.

கலைஞர் கருணாநிதி நகர் அண்ணா பிரதான சாலையில் உள்ள பகுதிகளில் மோசமான மண்ணின் தன்மையினாலும், கழிவுநீர் வாயு மூலமாகவும் கழிவுநீர் குழாய்களின் மேல் பகுதி அரித்து மண் உள்வாங்கி பல இடங்களில் பள்ளங்கள் ஏற்பட்டது. சீரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்படும்போது காலதாமதம் ஏற்படுவதால் போக்குவரத்து தடைபட்டு பொதுமக்களுக்கு சிரமம் ஏற்பட்டது.

இதற்கு மாற்று ஏற்பாடாக நிரந்தர தீர்வு காணும் வகையில் அண்ணா பிரதான சாலையில் ரூ.31.53 கோடி மதிப்பீட்டில் கழிவு நீர் கட்டமைப்பினை மாற்றியமைக்கும் பணிகள் சென்னை குடிநீர் வாரியத்தால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அண்ணா பிரதான சாலைக்கு வரும் கழிவுநீர் அனைத்தையும் அருகில் உள்ள அசோக் நகர், பழைய நெசப்பாக்கம், கே.கே.நகர் 'A' மற்றும் பாரதிதாசன் காலனி ஆகிய கழிவு நீர் உந்து நிலையங்களுக்கு திசை திருப்பி 7 புதிய கழிவுநீர் கிணறுகள் அமைக்கப்பட்டு புனரமைத்து மேம்படுத்தும் பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளது. மேலும், பழைய நெசப்பாக்கம் கழிவுநீர் உந்து நிலையத்திலிருந்து சுமார் 1.5 கி.மீ நீளத்திற்கு புதிய இரும்பு குழாய்கள் பதித்து நெசப்பாக்கம் கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையத்துடன் இணைக்கும் பணிகளும், கே.கே.நகர் 'A' உந்து நிலையத்திலிருந்து சுமார் 1.1 கி.மீ நீளத்திற்கும் மற்றும் கே.கே.நகர் 'B' உந்து நிலையத்திலிருந்து 500 மீட்டர் நீளத்திற்கும், நடேசன் சாலை சந்திப்பு காமராஜர் சாலை வரை புதிதாக இரும்பு குழாய்கள் பதித்து இணைக்கும் பணிகளும் மேற்கொள்ளப்படும்.

நிர்ணயிக்கப்பட்ட கால அளவிற்குள் கழிவுநீர் கட்டமைப்பினை மாற்றி அமைக்கும் பணிகள் அனைத்தையும் முடித்திட வேண்டுமென அமைச்சர் சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு உத்தரவிட்டார். இத்திட்டத்தின் மூலம் சி.ஐ.டி நகர், அசோக் நகர், கே.கே.நகர், எம்.ஜி.ஆர் நகர், நெசப்பாக்கம், ஜாபர்கான்பேட்டை, சைதாப்பேட்டை, சாலிகிராமம் மற்றும் விருகம்பாக்கம் ஆகிய பகுதிகளில் உள்ள 10 இலட்சத்து 64 ஆயிரம் மக்கள் பயன் பெறுவர்.

நெசப்பாக்கத்தில் செயல்பட்டுவரும் நாளொன்றுக்கு 50 மில்லியன் லிட்டர் திறன் கொண்ட புதிய கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் பெருநகர சென்னை மாநகராட்சியுடன் புதிதாக இணைக்கப்பட்ட பகுதிகளான ராமாபுரம், போரூர், மணப்பாக்கம் மற்றும் முகலிவாக்கம் உள்ளிட்ட பகுதிகளில் பாதாள சாக்கடை திட்டப் பணிகள் நடைபெற்று வரும் நிலையில் முதலமைச்சர் அவர்களால் 12.05.2023 அன்று நெசப்பாக்கத்தில் நாளொன்றுக்கு 50 மில்லியன் லிட்டர் திறன் கொண்ட புதிய கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் தொடங்கி வைக்கப்பட்டது. இந்த புதிய கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தின் மூலம் 5 கோடி லிட்டர் பயன்படுத்தப்பட்ட நீர் சுத்திகரிப்பு செய்யப்படும்.

தற்போது, செயல்பட்டு வரும் இந்நிலையத்தின் மூலம், பகுதி10 (கோடம்பாக்கம்), பகுதி11 (வளசரவாக்கம்) மற்றும் பகுதி12 (ஆலந்தூர்) பகுதிகளில் உள்ள 5 இலட்சம் மக்கள் பயன் பெறுவர். மேலும், இக்கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தில் நாளொன்றுக்கு 0.5 மெகாவாட் திறன் கொண்ட உயிர் வாயு இயந்திரத்தின் மூலம் 3,000 யூனிட் வரை மின் உற்பத்தி செய்யப்படுகிறது. மேலும், நெசப்பாக்கம் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலைய வளாகத்தில் உள்ள சுத்திகரிப்பு நிலையங்களின் மூலம் மேற்கண்ட தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தி நாளொன்றுக்கு 2.0 மெகாவாட் மின் உற்பத்தி செய்யப்படுகிறது. கழிவுநீர் சுத்திகரிப்பதற்கு புதுப்பிக்கத்தக்க மின்சாரத்தை (Renewable energy) சென்னை குடிநீர் வாரியம் பயன்படுத்தி வருகிறது.

இவ்வாய்வின்போது மேயர் திருமதி.ஆர்.பிரியா, சட்டமன்ற உறுப்பினர் எ.எம்.வி.பிரபாகர ராஜ், துணை மேயர் மு.மகேஷ் குமார், அரசு முதன்மைச் செயலாளர், நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, முனைவர் தா.கார்த்திகேயன், சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரிய மேலாண்மை இயக்குநர் இரா.கிர்லோஷ் குமார், பொறியியல் இயக்குநர் எம்.ஜெய்கர் ஜேசு தாஸ், தலைமைப் பொறியாளர் இரா.சிவமுருகன், பகுதிப் பொறியாளர் ஜி.குளிர்ந்தராஜா, செயற் பொறியாளர் ஜெய்சங்கர், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

சாலையில் கைவிடப்பட்ட

வாகனங்களை அப்புறப்படுத்தும் பணி!

மேயர் திருமதி. ஆர்.பிரியா ஆய்வு!

சென்னை, செப்.2- மேயர் ஆர்.பிரியா நிதி நிலை அறிக்கையில் அறிவிப்பின்படி, பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் நீண்ட காலமாக கேட்பாரற்று பொது மக்களுக்கும், போக்குவரத்திற்கும் இடையூறாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த கைவிடப்பட்ட வாகனங்களை அப்புறப்படுத்தும் பணி தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இதனைத் தொடர்ந்து இப்பணிகளை மேலும் தீவிரப் படுத்தும் வகையில், இராயபுரம் மண்டலம், எழும்பூர், டாக்டர் நாயர் சேவை சாலையில் 5 வாகனங்களும், அண்ணாநகர் மண்டலம், நியூ ஆவடி சாலையில் 3 வாகனங்கள் என மொத்தம் 8 வாகனங்கள் காவல்துறை உதவியுடன் இன்று அப்புறப்படுத்தப்பட்டது.

இராயபுரம் மண்டலத்திற்குட்பட்ட எழும்பூர், டாக்டர் நாயர் சேவை சாலையில் காவல்துறையுடன் இணைந்து மேற்கொள்ளப்பட்டு வரும் வாகனங்களை அப்புறப்படுத்தும் பணியினை மேயர் திருமதி ஆர்.பிரியா, கூடுதல் தலைமைச் செயலாளர்/ ஆணையாளர் டாக்டர் ஜெ.ராதாகிருஷ்ணன், ஆகியோர் நேற்று (01.09.2023) பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டனர்.

பின்னர், மேயர் ஆர். பிரியா செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது :

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆலோசனையின்படியும், நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படியும், பெருநகர சென்னை மாநகராட்சியின் 2022-23ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கை அறிவிப்பின்படி, பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் நீண்ட காலமாக கேட்பாரற்று பொது மக்களுக்கும், போக்குவரத்திற்கும் இடையூறாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த கைவிடப்பட்ட வாகனங்கள் அப்புறப்படுத்தப்பட்டு வருகிறது.

பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் நீண்ட காலமாக கேட்பாரற்று கைவிடப்பட்ட நிலையில் 1,308 வாகனங்கள் கண்டறிப்பட்டுள்ளது. செப்டம்பர் 1ஆம் தேதி முதல் இந்த வாகனங்களை அகற்றும் பணி தீவிரமாக மேற்கொள்ளப்படும் என ஏற்கனவே தெரிவிக்கப்பட்டிருந்தது. அதனடிப்படையில் இன்று முதல் இந்த வாகனங்களை அப்புறப்படுத்தும் பணிகள் காவல் துறை உதவியுடன் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

நேற்று எழும்பூர், வார்டு 61க்குட்பட்ட பகுதிகளில் 5 வாகனங்கள் அப்புறப்படுத்தப்பட்டுள்ளது. இவ்வாறு அப்புறப்படுத்தப்படும் வாகனங்கள் பள்ளிக்கரணையில் உள்ள குப்பைக் கொட்டும் வளாகத்தில் வைக்கப்பட்டு, குறிப்பிட்ட காலத்திற்கு பிறகு ஏலம் விடப்படும்.

இவ்வாறு கைவிடப்பட்ட வாகனங்கள் சாலை மற்றும் தெருக்களில் நெடுங்காலமாக நிறுத்தி வைக்கப்படுவதனால், குப்பைகள் சேகரமாகும். மேலும், மழை பெய்தால் அவ்விடத்தில் மழைநீர் தேங்கி சுகாதார சீர்கேடு ஏற்படும். மேலும், பொதுமக்களுக்கும், போக்குவரத்திற்கும் இடையூறாக இருக்கும்.

மாநகராட்சியின் சார்பில் அப்புறப்படுத்தப்பட்ட வாகனங்களை உரிமை கோரி வரும் உரிமையாளர்கள் சரியான ஆவணங்களை காண்பிக்கும்பட்சத்தில் அவர்களிடம் ஒப்படைக்கப்படும்.

எனவே, மாநகராட்சிக் குட்பட்ட பகுதிகளில் போக்குவரத்திற்கும், பொதுமக்களுக்கும் இடையூறு ஏற்படுத்தும் வகையிலும், சுகாதாரச் சீர்கேடு ஏற்படும் வகையிலும் நீண்ட நாட்களாக கேட்பாரற்று நிற்கும் வாகனங்களை அதன் உரிமையாளர்கள் தாமாகவே முன்வந்து அகற்றிடுமாறு தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

இவ்வாறு மேயர் தெரிவித்தார்.

இந்த ஆய்வின்போது, தலைமைப் பொறியாளர் (திடக்கழிவு மேலாண்மை) என்.மகேசன் மற்றும் காவல் துறை, மாநகராட்சி அலுவலர்கள் உடனிருந்தனர்.

கிழக்கு தாம்பரத்தில் சி.எஸ்.ஐ. கார்லி மேல்நிலைப்பள்ளியில் மாணவ மாணவிகளுக்கு தமிழ்நாடு அரசின் விலையில்லா மிதிவண்டி வழங்கும் விழாவில் தாம்பரம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர், மாநகர கழக செயலாளர் எஸ்.ஆர்.ராஜா கலந்துகொண்டு மிதிவண்டிகளை வழங்கினார். உடன் 5வது மண்டல குழுத்தலைவர் எஸ்.இந்திரன், 4வது மண்டல குழுத்தலைவர் டி.காமராஜ், மாமன்ற உறுப்பினர், கல்விக்குழு உறுப்பினர் பி.ஜோதிகுமார் எம்.சி., ரமணி ஆதிமூலம், சசிகலா கார்த்திக், ஜெகன், கிரிஜா சரவணன், வேலுமணி, லோகநாதன், ஆசிரியர்கள், மாணவ மாணவியர்கள், கழக தோழர்கள் கலந்து கொண்டனர்.

ஆசியக் கோப்பை கிரிக்கெட் இந்தியா - பாகிஸ்தான் அணிகள் மோதல்!

புதுடெல்லி, செப். 2 - ஆசியக் கோப்பை கிரிக்கெட் தொடர் பாகிஸ்தான் மற்றும் இலங்கையில் நடைபெற்று வருகிறது.

2 போட்டிகள் இதுவரை நடைபெற்றுள்ளநிலையில், குரூப் ஏயில் உள்ள இந்திய அணி தனது முதல் போட்டியில் பாகிஸ்தான் நாளை மோதுகின்றன.

ஏற்கனவே பாகிஸ்தான் தனது முதல் போட்டியில் நேபாளத்தை வீழ்த்தியது.

இந்நிலையில், இந்தியாவை பாகிஸ்தான் எதிர்கொள்கிறது. இப்போட்டி இலங்கையில் Pallekale மைதானத்தில் நடைபெற உள்ளது. இதற்காக இரு அணிகளும் இலங்கையில் தீவிர பயிற்சி மேற்கொண்டு வருகின்றனர்.

கலைஞர் நூற்றாண்டு விழாவையொட்டி நாடாளுமன்ற தேர்தல் வரை

திராவிட மாடல் அரசின் சாதனைகளை மக்களிடம் விளக்கிட

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில் பகுதி - ஒன்றிய - நகர - பேரூர் வாரியாக தொடர் பொதுக் கூட்டங்கள்!

மாவட்ட கழகச் செயலாளர் – அமைச்சர் தா.மோ.அன்பரசன் அறிவிப்பு!

தமிழகத்திற்கும் கழகத்திற்கும் கவசமாய் திகழ்ந்து மறைந்தும் - மறையாமல் நம் நெஞ்சங்களில் நீங்கா இடம் பெற்றுள்ள முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவையொட்டி - அவர் தமிழினத்திற்காகவும் - தமிழ்நாட்டு மக்களுக்காவும் ஆற்றிய அரும்பெரும் சாதனைகளை விளக்கியும் -

தமிழ்நாட்டின் முதல்வராக பொறுப்பேற்று மக்கள் மனம் மகிழும் வகையில் திராவிட மாடல் ஆட்சி நடத்தி இந்தியாவின் No.1 முதல்வர் என்ற பெருமைமிகு சாதனையை படைத்து, ஈராண்டு ஆட்சியில் எண்ணிலடங்கா திட்டப் பணிகளை நிறைவேற்றி சாதனை படைத்த சரித்திரத் தலைவர் தளபதி அவர்களின் தலைமையிலான மக்கள் நலன் காக்கும் கழக அரசின் சாதனைகளை விளக்கியும்,

வருகிற நாடாளுமன்ற தேர்தல் வரை சனி - ஞாயிறு கிழமைகளில், காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில் பகுதி- ஒன்றிய - நகர - பேரூர் வாரியாக மக்கள் கூடும் முக்கிய இடங்களில் தொடர்ச்சியாக பொதுக் கூட்டங்கள் நடைபெற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

அதன் முதல் கட்டமாக, கீழ்க்கண்ட பகுதி- ஒன்றிய - நகர - பேரூர்களில் கீழ்க்காணும் விவரப்படி தொடர் பொதுக் கூட்டங்கள் நடைபெற உள்ளது.

நாள் : 09.09.2023 – சனி / நேரம் : மாலை 5 மணி

பகுதி – ஒன்றிய – நகர – பேரூர்	உரையாற்றும் பேச்சாளர்
ஆலந்தூர் வடக்கு பகுதி	முனைவர் கோவி.செழியன், எம்.எல்.ஏ
காட்டாங்குளத்தூர் வடக்கு ஒன்றியம்	முனைவர் சபாபதி மோகன்
தாம்பரம் கிழக்கு பகுதி	ஈரோடு இறைவன்
திருப்போரூர் வடக்கு ஒன்றியம்	சைதை சாதிக்
பல்லாவரம் வடக்கு பகுதி	கரூர் முரளி
செங்கல்பட்டு நகரம்	ஆரணி மாலா
மாங்காடு நகரம்	தூத்துக்குடி சரத்பாலா
திருப்பெரும்புதூர் வடக்கு ஒன்றியம்	பவானி கண்ணன்

நாள் : 10.09.2023 – ஞாயிறு / நேரம் : மாலை 5 மணி

பகுதி – ஒன்றிய – நகர – பேரூர்	உரையாற்றும் பேச்சாளர்
பம்மல் தெற்கு பகுதி	முனைவர் கோவி.செழியன், எம்.எல்.ஏ
ஆலந்தூர் தெற்கு பகுதி	முனைவர் சபாபதி மோகன்
காட்டாங்களத்தூர் தெற்கு ஒன்றியம்	ஈரோடு இறைவன்
குன்றத்தூர் வடக்கு ஒன்றியம்	சைதை சாதிக்
திருப்போரூர் பேரூர்	கரூர் முரளி
பல்லாவரம் தெற்கு பகுதி	தூத்துக்குடி சரத்பாலா
மறைமலை நகர் நகரம்	கந்திலி கரிகாலன்
திருப்பெரும்புதூர் தெற்கு ஒன்றியம்	பவானி கண்ணன்

நாள் : 16.09.2023 – சனி / நேரம் : மாலை 5 மணி

பகுதி – ஒன்றிய – நகர – பேரூர்	உரையாற்றும் பேச்சாளர்
குன்றத்தூர் நகரம்	முனைவர் சபாபதி மோகன்
திருப்போரூர் தெற்கு ஒன்றியம்	நெல்லிக்குப்பம் புகழேந்தி
பம்மல் வடக்கு பகுதி	குத்தாலம் அன்பழகன்
கன்டோன்மெண்ட் நகரம்	சைதை சாதிக்
நந்திவரம் கூடுவாஞ்சேரி நகரம்	சேலம் சுஜாதா
செம்பாக்கம் வடக்கு பகுதி	ஆரணி மாலா
புனித்தோமையர் மலை வடக்கு ஒன்றியம்	குடியாத்தம் புவியரசி
திருக்கழுக்குன்றம் பேரூர்	நாகம்மை கருப்பையா

நாள் : 17.09.2023 – ஞாயிறு / நேரம் : மாலை 5 மணி

பகுதி – ஒன்றிய – நகர – பேரூர்	உரையாற்றும் பேச்சாளர்
செம்பாக்கம் தெற்கு பகுதி	நெல்லிக்குப்பம் புகழேந்தி
குன்றத்தூர் தெற்கு ஒன்றியம்	குத்தாலம் அன்பழகன்
பெருங்களத்தூர் தெற்கு பகுதி	கந்திலி கரிகாலன்
திருக்கழுக்குன்றம் வடக்கு ஒன்றியம்	போடி காமராஜ்
மாமல்லபுரம் நகரம்	அத்திப்பட்டு சாம்ராஜ்
திருப்பெரும்புதூர் பேரூர்	சேலம் சுஜாதா

அறிவிக்கப்பட்டுள்ள இந்த பொதுக்கூட்டங்களை, அந்தந்த பகுதி - ஒன்றிய - நகர - பேரூர் கழகச் செயலாளர்கள் சிறப்பான முறையில் ஏற்பாடு செய்து, உள்ளூரில் உள்ள கழகப் பேச்சாளர்களையும் இணைத்து, அழைப்பிதழில் கழக நிர்வாகிகளின் பெயர்களை விடுபடாமல் முறையாக துண்டு பிரசுரங்களை அச்சிட்டு,

அந்தந்த மாநகர பகுதி - ஒன்றிய - நகரங்களில் அடங்கிய நகர - பேரூர் - வட்டக் கழக நிர்வாகிகள் - இளைஞர் அணி - மாணவர் அணி - மகளிர் அணி உள்ளிட்ட கழக அணிகளின் நிர்வாகிகள் - வாக்குச்சாவடி தேர்தல் பணிக்குழு உறுப்பினர்கள் - உள்ளாட்சி மன்றப் பிரதிநிதிகள் மற்றும் கழக செயல் வீரர்கள் அனைவருக்கும் முறையாக தகவல் தந்து அவர்கள் அனைவரையும் இக்கூட்டத்தில் பங்கேற்கச் செய்து,

எந்த நோக்கத்திற்காக இந்த தொடர் பொதுக் கூட்டங்கள் நடத்தப்பட உள்ளதோ, அந்த நோக்கத்தை நிறைவேற்றிடும் வகையில், முத்தமிழறிஞர் கலைஞர் மற்றும் அன்புத் தலைவர் தளபதி அவர்கள் தமிழ்நாட்டில் உள்ள ஏழை - எளிய, தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட அடித்தட்டு மக்களுக்காக ஆற்றிய அரும் பெரும் சாதனைகளை மக்களிடம் கொண்டு சென்று சேர்த்திட, இப்பொதுக்கூட்டங்களை ஆடம்பரமின்றி - மிகவும் எளிமையான முறையில் - எழுச்சியுடன் நடத்திடும்படி அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

அமைச்சர் தா.மோ.அன்பரசன்

செயலாளர், காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட தி.மு.க.

நீட் தேர்வில் பாதிப்படைந்த மாணவி அனிதா வீர மரணம் அடைந்த தினத்தையொட்டி திருவள்ளூர் மத்திய மாணவர் அணி சார்பில் ஆவடியில் முன்னாள் அமைச்சரும் மாவட்ட கழகச் செயலாளருமான ஆவடி சாமு.நாசர் எம்.எல்.ஏ. திருவுருவ படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். அருகில் மாநில மாணவர் அணி இணை செயலாளர் சி.ஜெரால்டு, மாநகரக் கழக பொறுப்பாளர் சண் பிரகாஷ், பகுதிகளாக செயலாளர்கள் நாராயண பிரசாந்த், ஜி.ராஜேந்திரன், பேபிசேகர், பொன்.விஜயன், ப.ச.கமலேஷ், பிரேம் ஆனந்த், மாவட்ட மாணவரணி அமைப்பாளர் வி.தியாகராஜன், உள்பட அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் உள்பட நிர்வாகிகள் உள்ளனர்.